DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 15/2019

List of Witness : Lw7

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர். சிவசெல்வி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | செல்வராஜ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 17/08/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2018 ஆம் தேதி அன்று மாலை 5.45 மணிக்கு பணியில் இருந்தபோது வேலுச்சாமி என்பவர் தன்னை தெரிந்த நபர் ஒருவர் 02.10.2018 ஆம் தேதி அன்று மாலை 3.00 மணிக்கு பாச்சலூர் ரோட்டில் வைத்து கையால் அடித்ததாக கூறி மருத்துவமனைக்கு வந்தவரை பரிசோதித்து பார்த்தபோது அவருக்கு வெளிக்காயங்கள் ஏதும் இல்லை. அவர் உடல்வலி இருப்பதாக கூறினார். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்கூறிய காயத்தின் அடிப்படையில் காயமானது சாதாரண காயம் என சான்று அளித்தேன். **என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னிடம் சிகிச்சை பெற்றுக்கொண்ட வேலுச்சாமி அவருக்கு உடலில் எந்த இடத்தில் வலி உள்ளதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சிகிச்சையின் போது உடல்வலி இருப்பதாக மட்டும்தான் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபருக்கு வயது முதிர்வின் காரணத்தினாலும், அதிகமான உடல் உழைப்பினாலும் உடல்வலி ஏற்படும் என்றால் சரிதான்.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.08.17 18:26:06 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 17/08/2026